**செய்தி வெளியீடு எண்: 738** **நாள்: 09/12/2011**

# <u>செய்தி வெளியீடு</u>

இயற்கையின் படைப்பில் உருவாக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் அன்பு காட்டி பாதுகாக்கப்பட வேண்டியவை என்பது மனிதநேயமிக்க சமூக ஆர்வலர்களின் சிந்தனையாகும். மனிதர்களுக்கு பல்வகையிலும் உதவிடும் விலங்குகளிடத்தில் அன்பும் கருணையும் காட்ட வேண்டும் என்பதும் அவற்றுக்கு கொடுமைகள் இழைக்கப்படாமல் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்பதும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் விருப்பம் ஆகும்.

யானைகளை முறையாக பராமரிக்காது சீரற்ற கடினமான தரையில் நிற்க வைப்பதாகவும், போதுமான ஓய்வு அளிப்பதில்லை எனவும், அவைகள் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்கு 2003–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு முறையாகப் பராமரிக்கப்படாத காரணத்தால் யானைகள் சில இடங்களில் அமைதி இழந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய நிகழ்வுகளும் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் திருக்கோயில்களில் உள்ள யானைகளை, தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல் போதுமான ஓய்வு தரவும் சத்தான உணவளித்து யானைகளை முறையாக பராமரிக்கவும், உடல் நலத்தைப் பேணவும், தேவையான சிகிச்சை அளிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியதோடு இந்து சமய அறநிலையத் துறை தமிழக வனத்துறையின் ஒத்துழைப்போடு தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் யானைகள் மற்றும் தனியார் யானைகளை நீர்வசதி கொண்ட, ஏற்ற சுற்றுச்சூழல் அமைந்த முதுமலை (தெப்பக்காடு) வனவிலங்குச் சரணாலயத்தில் யானைகள் நலவாழ்வு முகாம் நடத்திட ஆணையிட்டார்கள்.

இதன்படி 2003–ஆம் ஆண்டில் 55 யானைகளுக்கு 30 நாட்களும், 2004–ஆம் ஆண்டில் 65 யானைகளுக்கு 48 நாட்களும், 2005–ஆம் ஆண்டில் 63 யானைகளுக்கு 48 நாட்களும் முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் யானைகள் நலவாழ்வு முகாம்கள் சிறப்புடன் நடத்தப்பட்டன. இந்த முகாமில் யானைகளின் உடல்நலம் பேணப்பட்டு புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டது. அவற்றின் உடல்நலமும், மனநலமும் பேணப்பட்டு நலவாழ்வு முகாம் முடிந்து திருக்கோயிலுக்கு அவைகள் திரும்பிச் சென்று புத்துணர்ச்சியோடு தங்கள் பணிகளை மேற்கொண்டன. அத்துடன் யானைகளை அன்புடன் பராமரிக்கும் அவசியத்தை உணர்த்தும் வகையில் எல்லா யானைப் பாகர்களுக்கும் சிறப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இத்திட்டம் அனைத்து தரப்பினராலும் சிறப்பாக பாராட்டப்பட்டதுடன், இதன் பயன்கள் சமுதாயத்தில் வெகுவாக உணரப்பட்டன.

இந்நலவாழ்வு முகாம் கடந்த 5 ஆண்டுகளாக நடத்தப்படாததன் காரணமாக, பெரும்பாலான யானைகள் உடல் நலமும், மன நலமும் குன்றி சோர்வுடன் காணப்படுகின்றன. இதனை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் யானைகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் வகையில், இவ்வாண்டு திருக்கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் சொந்தமான 45 யானைகளுக்கு 48 நாட்களுக்கு முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் (தெப்பக்காடு) "யானைகள் நலவாழ்வு முகாம்" நடத்த ஆணையிட்டுள்ளார்கள். இந்த யானைகள் நலவாழ்வு முகாம் டிசம்பர் 14ந்தேதி முதல் நடத்தப்படும்.

இந்த யானைகள் நலவாழ்வு முகாம் நடத்தப்படுவதை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பொது நல வழக்குகளும் இன்று (9.12.2011) அனுமதி நிலையிலேயே சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன.

*******

**வெளியீடு :** இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
**நாள் :** 9.12.2011